திருவாளர்கள் எல். பலராமன், திரு. என். கிட்டப்பா, ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் திரும்பப்பெறப்பெற்றவனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் டி. மணி, எல். இளையபெருமாள் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1981-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (6—2—1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

187. தமிழ் நாடு கால்நடை மன்றத்திற்கு சில உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 5—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2181 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1957 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் [தமிழ் நாடு சட்டம் 21/1957) 16(7) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

188. உள்துறையின் 28—8—1977 ஆம் தேதியன்று வெளியாகி 19—10—1977 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் 11- பிரிவு-2, பக்கம் 618-ல் (ஆங்கிலத்தில்) வெளியான 11-2/எச்.-ஓ/5093/77 ஆம் எண். அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 11—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2955 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1981 பிப்ரவரி 5]

189. சென்னையிலுள்ள திட்டமிடுதல் பிரிவு 68-ல் உள்ள கங்காதரேசுவரர் கோவில் பகுதிக்கான விரிவான மேம்பாடுத் திட்ட வரை படத்தை வெளியிடுவது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 11—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 49-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுபுற அமைப்புத் திட்டச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

190. தமிழ் நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 892 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

* 25. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டமுன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1981).

* 26. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1981).

* 27. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைத் தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1981).

* 28. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1981).

* 29. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981).

* 30. தமிழ் நாடு 1981 ஆம்ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1981).

---

* 2—2—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.